மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

12.10.2022 புதன்கிழமை

supeedsam.com supeedsam@gmail.com

# இலங்கையில் போசாக்கு குறைபாடு 2 வீதத்தால் அதிகரிப்பு

## அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல

நாட்டில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் போசாக்கு குறைபாடு 2 வீதத்தால் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். கொழும்பில் இன்று (புதன்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதன்போது, மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர், "தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக குழந்தைகளின் போசாக்கு நிலை தொடர்பில் சிக்கல் நிலை ஏற்பட்டுள்ளதாக அண்மைய நாட்களில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன அடுத்த ஐந்து முதல் பத்து வருடங்களில் நாம் காணாமல் போய்விடலாம். ஆனால், நம் குழந்தைகள் குறைந்த மனநலம் மற்றும் குறைந்த ஆற்றல் கொண்ட குழந்தைகளாக மாறினால் அதற்கு நாம் ஒரு நாள் சபிக்கப்படுவோம். எனவே, அடிப்படை விஷயங்களை நாம் புரிந்து கொள்ள வேண்டும். மக்களின் பசி, குழந்தைகளின் போசாக்கின்மை, கர்ப்பிணி தாய்மார்களுக்கான உணவு என்பனவே எனக்கு அடிப்படைத் தேவைகளாக தெரிகின்றன" என அவர் தெரிவித்துள்ளார்.

# எரிக் சொல்ஹெய்ம் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமனம்



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசகராக நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் முன்னாள் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டுள்ளார். அவரோடு மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட்டும் ஜனாதிபதியின் ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர்கள் சர்வதேச பருவநிலை தொடர்பான ஆலோசனைகளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு வழங்குவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்று காலை இடம்பெற்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுடனான சந்திப்பு மிகவும் சிறப்பு மிக்கது என எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார். மேலும் பசுமைப் பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் இலங்கையின் காலநிலை தொடர்பான தலைமைத்துவத்திற்கான தொலைநோக்கு பார்வை, ஜனாதிபதிக்கு உள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையில் தற்போது 96 இலட்சம் பேர் வறுமையில்

இலங்கையில் தற்போது 96 இலட்சம் பேர் வறுமையில் வாடுவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் ஆய்வில் தெரியவந்துள்ளது. இந்த விடயம் தொடர்பாக அந்த பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் துறை பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார். 2019ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 30 இலட்சம் மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்தனர் என்றும் ஆனால் அந்த தொகை தற்போது 96 இலட்சமாக உயர்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கைச் சமூகத்தில் வாழும் சுமார் 42 வீதமான மக்கள் தற்போது வறுமையில் வாடுவது ஆய்வில் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இலங்கையில் 26 வீதமான மக்கள் வறுமையில் வாடுவதாக அண்மையில் உலக வங்கி ஆய்வு ஒன்றை மேற்கொண்டுள்ளது என்றும் ஆனால் இன்னும் பலர் உண்மையில் வறுமையில் வாழ்கிறார்கள் என்பது ஆய்வில் தெளிவாகத் தெரிகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சிறுவர்களை ஆர்ப்பாட்டங்களுக்கு அழைத்துச் செல்வதைத் தடுக்க

## உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை

ஆர்ப்பாட்டங்களில் சிறுவர்களை கேடயமாக பாவிப்பது நாட்டின் சட்டத்தின் பிரகாரம் பாரிய குற்றமாகும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சிறுவர்களை ஆர்ப்பாட்டங்களுக்கு அழைத்துச் செல்வதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். சிறுவர் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் சிறுவர்களின் மனித உரிமைகளைப் பாதுகாத்தல் தொடர்பான விசேட கலந்துரையாடலொன்று இன்று (12) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார். "குழந்தைகள் மற்றும் இளைஞர்கள் உடல், உள ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், மத, சமூக ரீதியாகவும் முழுமையாக வளர்ச்சி காண்பதை உறுதி செய்வதற்கும், அவர்கள் சுயநல தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கும், பாகுபாடு

02

# புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு



நாட்டில் புற்றுநோய்க்கான மருந்துகளுக்கு பாரிய தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இந்நாட்டில் சில மருந்துகளை தேடிப் பிடிக்க முடியாத நிலை இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். குருநாகல் பிரதேசத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன இதனை தெரிவித்துள்ளார்.

# இலங்கையர்களுக்கு கடும் எச்சரிக்கை விடுத்துள்ள அவுஸ்திரேலியா

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்குள் பிரவேசிக்க முயற்சிக்கும் இலங்கையர்களுக்கு அவுஸ்திரேலியா கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது. அத்துடன் செல்லுபடியாகும் வீசா இன்றி அவுஸ்திரேலியா வர முயற்சிப்பவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கைக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள் என்றும் அவுஸ்திரேலியா எச்சரித்துள்ளது. அவுஸ்திரேலியாவின் எல்லைக்காவல் தளபதி ரியர் அட்மிரல் ஜஸ்டின் ஜோன்ஸ், அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோதே இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

# பாடசாலை கற்றல் செயற்பாடுகளின் பின்னர் மாணவர்களுக்கான தொழில்சார் கல்வி

பாடசாலை கற்றல் செயற்பாடுகளின் பின்னர் மாணவர்களுக்கான தொழில்சார் கல்வி வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த வேலைத்திட்டம் ஸ்ரீ ஜயவர்தனபுர கல்வி வலயத்தில் உள்ள 07 பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் மஹிந்த யாப்பா தெரிவித்துள்ளார். குறித்த மாணவர்களுக்கு மதிய உணவை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன், பாடசாலை மாணவர்களுக்காக பொழுதுபோக்கு வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் தெரிவித்துள்ளார்

# பலாலி விமான நிலையத்திலிருந்து தமிழகத்திற்கான விமான சேவை

யாழ்ப்பாணம் – பலாலி விமான நிலையத்திலிருந்து தமிழகத்திற்கான விமான போக்குவரத்தை இந்த மாத இறுதியில் ஆரம்பிக்கவுள்ளதாக பலாலி சர்வதேச விமான நிலையம் அறிவித்துள்ளது. அதன்படி, பலாலி விமான நிலையத்தில் இருந்து சென்னைக்கான விமான போக்குவரத்தினை எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாக அந்த விமான நிலையத்தின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். குறித்த விமான சேவை தொடர்பில் இந்திய விமான நிறுவனத்துடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இந்த நிலையில், விமான போக்குவரத்தை முன்னெடுப்பதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நாட்டின் மூன்றாவது சர்வதேச விமான நிலையமாக பலாலி சர்வதேச விமான நிலையம் 2019 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# 100,000 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுவோருக்கும் வருமான வரி

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள உள்நாட்டு இறைவரித்திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம் மாதாந்தம் குறைந்தபட்சம் 100,000 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறுவோர்கூட வருமான வரியைச் செலுத்தவேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருப்பதுடன், இதன்விளைவாக 20 சதவீதமான வரிவருமானத்தை நாட்டுக்கு ஈட்டித்தரும் தனிநபர்கள் வரி ஏய்ப்பில் ஈடுபடக்கூடிய சாத்தியப்பாடு உயர்வடைந்துள்ளது. 2017 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான உள்நாட்டு இறைவரித்திருத்தச் சட்டமூலத்திற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டதைத் தொடர்ந்து அச்சட்டமூலம் நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்பட்டுள்ளது. அச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் மாதாந்தம் குறைந்தபட்சம் 100,000 ரூபாவுக்கு மேற்பட்ட வருமானம் பெறும் அனைவரும் வருமான வரியைச் செலுத்தவேண்டிய நிலையேற்படும். ஏற்கனவே நடைமுறையில் இருந்த வருமான வரி அறவிடத்தகுந்த குறைந்தபட்ச வருடாந்த வருமானமான 3 மில்லியன் ரூபா இத்திருத்தச்சட்டமூதத்தின் பிரகாரம் 1.2 மில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.




## சிறுவர்களை ஆர்ப்பாட்டங்களுக்கு

காட்டப்படுவதில் இருந்து அவர்களைப் பாதுகாக்கவும் ஏற்ற வகையில் அவர்களின் நலனை மேம்படுத்துவற்காக அரசாங்கம் விசேட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்." என்று அரசியலமைப்பின் 27 ஆம் சரத்தின் 13 ஆவது உப சரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, குழந்தைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பு என்றும் வலியுறுத்தினார். சிறுவர் பாதுகாப்பு தொடர்பான பொறுப்புகளை, இலங்கை பொலிஸார் மற்றும் சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு வழங்கவும் இதன் போது நடவடிக்கை எடுக்கப்பட்டது. சிறுவர்களை பாலியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துவதற்கு எதிராகவும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக சிறுவர்களின் உரிமைகளை பாதுகாக்கும் சட்டமொன்றை அவசரமாக தயாரிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சட்டமா அதிபருடன் ஆலோசனை நடத்தி, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

சட்டவிரோதமான முறையில் இந்தியாவுக்குச் செல்லமுற்பட்ட நிலையில் கைது செய்யப்பட்டவர்களிடையே இருக்கும் சிறுவர்கள், பெற்றோரிடமிந்து பிரித்து வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமது கவனத்தை செலுத்திய ஜனாதிபதி, அவர்களை பெற்றோரிடம் தங்கவைக்க ஏற்பாடு செய்யுமாறும் அறிவித்துள்ளார். சிறுவர் இல்லங்களிலுள்ள சிறுவர்களின் கல்வி மற்றும் அவர்களின் உரிமைகளை பாதுகாப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத்திய ஜனாதிபதி, சிறுவர் இல்லங்களில் உள்ள விசேட தேவையுடைய சிறுவர்களை இனங்கண்டு, அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார். சிறுவர் இல்லங்களுக்கு பொறுப்பானவர்களுக்கு முறையான பயிற்சிகள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இதன் மூலம் சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தவிர்க்க முடியும் எனவும் தெரிவித்தார். பெண்கள் மற்றும் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கமற்றும் துறைசார் நிறுவனங்களின் அதிகாரிகள் பலரும் இக்கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# சதா சரவணபவனின் தீட்டு வீடு நாடக நூலும் ஓம் நாதம் பல்திறன் வட்டு வெளியீடும்




தமிழரியல் இணையத் தொலைக்காட்சி பணிப்பாளரும் மட்டக்களப்பு மக்கள் வங்கியின் மேனாள் உதவிப்பிராந்திய முகாமையாளருமான சதா சரவணபவனின் தீட்டு வீடு நாடக நூல் மற்றும் ஓம் நாதம் பல்திறன் வட்டு வெளியீடும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (16.10.2022) காலை 9.30 மணிக்கு வெளியிட்டு வைக்கப்படவுள்ளது.

எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் ஏற்பாட்டில் மூத்த எழுத்தாளர் தமிழறிஞர் கலாநிதி அகளங்கள் தலைமையில் மட்டக்களப்பு தேவநாயகம் மண்டபத்தில் இசை இளவல் ஜீவம் ஜோசப் அரங்கில் இவ் வெளியீட்டு நடைபெறவுள்ளது. ஆசியுரையினை இராமகிருஷ்ண மிசன் மட்டக்களப்பு சுவாமி நீலமாதவானந்தஜீ மஹராஜ் வழங்க, அறிமுகவுரையினை எழுத்தாளர் ஊக்குவிப்பு மையத்தின் மேலாளரும் இலங்கை இளைஞர் பாராளுமன்ற மேனாள் உதவிப்பணிப்பாளருமான குழந்தை எழுத்தாளர் டாக்டர் ஓ.கே.குணநாதன் நிகழ்த்தவுள்ளார்.

நிகழ்வில், நூல் வெளியீடு, பல்திறன் வட்டு வெளியீடு, படைப்பாளி கௌரவம், அதிதிகளின் பாராட்டுரைகள், நூலாசிரியரின் மகிழ்வுரை ஆகியனவும் நடைபெறவுள்ளன. முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் க.விமலநாதன், மட்டக்களப்பு மாவட்ட மேனாள் அரசாங்க அதிபர்களான செ.புண்ணியமூர்த்தி, ம.உதயகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

# தங்கப்பதக்கம் வென்ற பேராத்துவெளி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன்



**எப்.முபாரக்**

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 16 வயதுக்குட்பட்ட 110 மீற்றர் தடைதாண்டல் போட்டியில் முதலாம் இடத்தை பெற்ற கந்தளாய் திஃபேராத்துவெளி முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர் ஜே .சமீர் தங்கப் பதக்கத்தை பெற்று பாடசாலைக்கும் கந்தளாயிக்கும் பெருமையை ஏற்படுத்தியுள்ளார். அண்மையில் பாடசாலைகளுக்கிடைய வெய்வல்லுனர் போட்டி நிகழ்சிகள் கந்தளாய் லீவாரத்தின விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இதன் போதே தடைதாண்டல் போட்டியில் தங்கப் பதக்கத்தினை சுவிகரித்துள்ளார். பாடசாலையின் அதிபர் அவர்களினால் தங்கப்பதக்கம் வென்ற ஜே. சமீர், பயிற்சிவிப்பாளர் எம்.எஸ். கபார் கான் ஆசிரியர் உதவி பயிற்றுவிப்பாளர் ஏ.ஜே. நிஸ ாமி ஆகியோர் பாடசாலை அதிபரால் கௌரவிக்கபபட்டார்கள். பாடசாலை சமூகம் பாடசாலை அபிவிருத்தி சங்கம் பழைய மாணவர் சங்கம் அதிபர்,ஆசிரியர் தங்கம் வென்ற மாணவனுக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றனர்.

# டேப் கணனிகள் மற்றும் அச்சு இயந்திரங்கள் வழங்கி வைப்பு



**நூருல் /ஹுதா உமர்**

மாகாண செயலகத்திற்குட்பட்ட நிலக் கட்டுப்பாட்டுப் பிரிவுகளுக்கு **UNHCR** உதவியுடன் எட்டு மில்லியன் ரூபா பெறுமதியான டேப் கணனிகள் மற்றும் அச்சு இயந்திரங்களை வழங்கும் நிகழ்வு இன்று (12) மாகாண காணி ஆணையாளர் அலுவலக ஏற்பாட்டில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நடைபெற்றது. கிழக்கு மாகாணத்தில் உள்ள 23 பிரதேச செயலகத்தின் காணி பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான வசதிகளை மேம்படுத்தும் வகையில் இந்த உபகரணங்கள் விநியோகிக்கப்பட்டன. இதன்படி அம்பாறை மாவட்டத்தில் ஏழு மாகாண செயலக அலுவலகங்களுக்கும், திருகோணமலையில் எட்டு மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் எட்டு பிரதேச செயலக அலுவலகங்களுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, மாகாண காணி ஆணையாளர் டி.எம்.ஆர். சி. தசாநாயக்க மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை சைவர்களின் தலைமையகமாகும்



**(வி.ரி. சகாதேவராஜா)**

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சி முழுமையாகும். கோணமாமலை சைவர்களின் தலைமையகமாகும். இவ்வாறு சிவசைனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு க.சச்சிதா னந்தன் தெரிவித்தார். திருகோணமலை விவகாரம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்.

இருள் நீக்கி அருள் பெருக்குவார், மருள் நீக்கிப் பொருள் பெருக்குவார், திருக்கோணமாமலை அமர்ந்தார். அப்பெருமானின் அருட் சூழலைக் கெடுக்காது ஆட்சியாளர் ஆணைகளைத் தருவேன் என மாண்புமிகு அமைச்சர் தேவானந்தா கூறியுள்ளார். மாண்புமிகு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கரைத் துணைக்கு அழைப்பேன் என்கிறார் தேவானந்தா. சொன்னதைச் செய்பவர். செய்வதைச் சொல்பவர். பழமொழிகள் பெருக்கித் தமிழ் மொழியின் சைவத்தின் மேன்மையைக் காப்பவர் தேவானந்தா. அரசு எடுத்த சைவருக்குத் தகாத முயற்சியை முளையிலேயே கிள்ளி எறிந்தார். அப்பொழுது அமைச்சரவைச் சகாக்களின் ஆதரவைப் பெற்றார். இப்பொழுது திருகோணமலைக்கு நேரில் சென்றுள்ளார். அடுத்து வரக்கூடிய தடைகளையும் தடுத்து நிறுத்துவார். கோணமாலை அமர்ந்தாரின் 400 ஏக்கர் நிலப்பரப்பையும் சைவர்களுக்கு உரித்தாக்குவார் என்ற நம்பிக்கை சிவ சேனையில் உள்ளவர்களுக்கு உண்டு.

# மதிப்பெண்களை வைத்து மனித அறிவை மதிப்பிடுவது முறையா?

## முப்பெரும் விழாவில் வலயக்கல்விப் பணிப்பாளர் அமீர் கேள்வி



**( காரை சகா)**

சமகாலத்தில் மதிப்பெண்களை வைத்து மனித அறிவை மதிப்பிடுகின்றனர் . இது முறையா என்ற கேள்வி எழுகின்றது. சுவாமி விவேகானந்தர் கூறியது போன்று எம்மிடம் இருக்கின்ற ஆற்றல்களை திறமைகளை ஆசிரியர்கள் வெளிக் கொணர வேண்டும்.அதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறு சம்மாந்துறை வலயத்துக்கு உட்பட்ட அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலய முப்பெரும் விழாவில் உரையாற்றிய சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் எஸ் எம் எம் அமீர் தெரிவித்தார். அன்னமலை ஸ்ரீ சக்தி வித்யாலய முப்பெரும் விழா நேற்று வித்தியாலய அதிபர் பொன். பாரதிதாசன் தலைமையில் நடைபெற்றபோது பேசுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஆசிரியர் தின விழா சிறுவர் தின விழா ,முதியோர் தின விழா ஆகிய மூன்று விழாக்களையும் இணைத்து முப்பெரும் விழா நேற்று நடைபெற்றது. விழாவில், பிரதிக் கல்வி பணிப்பாளர்களான திருமதி நிதர்ஷினி மகேந்திரகுமார், பி.எம்.யசீர் அரபாத் ,உதவி கல்வி பணிப்பாளர்களான வீ.ரீ. சகாதேவராஜா, எச்.நைரூஸ்கான் மற்றும் சமூக ஆர்வலர்களும் பெற்றோர்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் கலந்து கொண்டார்கள்.

அங்கு சிறப்பம்சமாக கொழும்பிலிருந்து வந்த ஹரி என்பவரின் மாயாஜால வித்தை சிறுவர்களை பெரிதும் கவர்ந்தமை குறிப்பிடத்தக்கது.

விழாவில் பணிப்பாளர் அமீர் மேலும் கூறியதாவது .. பெரிய பெரிய பாடசாலைகளிலே பரீட்சை வைத்து 90 அல்லது 100 புள்ளிகளை பெற்றவர்களுக்கு மட்டுமே இடம் வழங்குகிறார்கள். இது சரியா? இதுவும் இன்று கேள்வியாகிறது. உண்மையிலேயே படிக்காதவர்களை படிக்க வைக்கும் இடம் தான் பாடசாலை என்பதை நாங்கள் மறந்து விட முடியாது. நோயில்லாதவருக்குத்தான் வைத்தியம் பார்ப்பேன் என்று ஒரு வைத்தியர் கூற முடியாது .எனவே நாங்கள் அதை உணர்ந்து செயல்பட வேண்டும் . இப் பாடசாலை அதிபர் பொன்.பாரதிதாசன் இந்த சமூகத்தை உள்வாங்கி இருக்கின்றார். இதுதான் அவரது வெற்றி .சிறுவர்கள் உரிமைகளை மட்டும் பேசாது எமது கடமைகளையும் பேச வேண்டும் .இன்றைய இளைஞர் மத்தியில் போதைப்பொருள் பாவனை ஆபாச சிந்தனைகள் மோசமாக பீடித்துக் கொண்டிருக்கின்றது. இவை பாடசாலை மாணவர்களிடத்திலும் பரவ ஆரம்பித்திருக்கின்றது. எனவே பெற்றோர்கள் சமூக செயற்பாட்டாளர்கள் இதில் முக்கிய கவனம் எடுக்க வேண்டும் என்றார். பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் பெற்றோர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். பாடசாலைக்கு உதவி செய்தவர்கள் கல்வி சமூகத்தால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்கள். பாடசாலையில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்களை அன்னமலை தனவந்தர்கள் அன்பளிப்பு செய்தார்கள்.

# 21 வருடங்களின் பின் பதக்கம் வென்ற மாணவனுக்கு அமோக வரவேற்பு

**(எம்.என்.எம்.அப்ராஸ்)**

நடைபெற்று முடிந்த கிழக்கு மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 16 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான தட்டெறிதல் போட்டி நிகழ்ச்சியில் தரம்–10 இல் கல்வி பயிலும் மாணவன் எம்.எச். எம். அல் கிபத் வெண்கலப் பதக்கத்தை பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். கல்முனை அல் மிஸ்பாஹ் மகா வித்தியாலய பாடசாலை வரலாற்றில் 21 வருடங்களின் பின்னர் மாகாண மட்ட விளையாட்டு போட்டியில் பதக்கம் பெற்றதுடன் தனி நபர் போட்டி நிகழ்ச்சியில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவானமை இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது. தேசிய மட்டத்திற்கு தெரிவான மாணவனையும் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய ஏனைய மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களையும் வாழ்த்தி ஊர்வலமாக வரவேற்கும் நிகழ்வு நேற்று கல்முனையில் இடம்பெற்றது.

பாடசாலையில் அதிபர் எம்.ஐ.அப்துல் ரசாக் அவர்களின் தலைமையில் நடைபெற்ற காலை ஆராதனை கூட்டத்தின் போது தேசிய மட்டத்திற்கு தெரிவான மாணவன் அவரது பெற்றோர்கள் ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டனர். பாடசாலையின் பிரதி அதிபரும் விளையாட்டுக் குழு தலைவருமான ஐ.எல்.எம்.ஜின்னாஹ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற வரவேற்பு ஊர்வலத்தின் போது கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகர் மற்றும் பெரும் குற்றபிரிவு பொறுப்பதிகாரி ஏ.ரபிக் அவர்களாலும் கல்முனை அல் பஹ்ரியா தேசிய பாடசாலை அதிபர்,பிரதி அதிபர், ஆசிரியர்களினாலும் கல்முனை அல் அஸ்கர் வித்தியாலயத்தின் அதிபர் பிரதி அதிபர்கள் ஆசிரியர்களாலும் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஆசிரியர்களாலும் பெற்றோர்கள் வர்த்தகர்கள், சமூக பிரமுகர்கள், பாடசாலை நலன் விரும்பிகள், பொது மக்கள் ஆகியோர் மாலையிட்டு கௌரவமளித்து பல்வேறு அன்பளிப்புக்கள் வழங்கி வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்துடன் மு.கா. பிரதிப் பொருளாளர் ஏ.சி. யஹியாகான் அவர்களினால் மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களையும் வாழ்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன்,தேசிய மட்டத்திற்கு தெரிவான எம்.எச்.எம்.அல் கிபத்துக்கு ஒருதொகை பணப்பரிசும் வழங்கி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

## மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து | Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ | 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சூ.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

## மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சூ.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்வை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# நாடும் ஆட்சியாளர்களின் சிந்ததையும் அழிவை நோக்கி செல்கிறது

## முன்னாள் எம்பி. கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவிப்பு




**(திருக்கோவில் நிருபர்-எஸ்.கார்த்திகேசு)**

இலங்கை நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக இரவு நேர கேளிக்கைகளின் ஊடாக பெண்களை வைத்து வருமானத்தை ஏற்படுத்த முடியும் என ஒரு பெண் அமைச்சர் கூறும் அளவுக்கு இவர்களின் வங்குரோத்து அரசியல் இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் அம்பாரை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார். அம்பாரை திருக்கோவில் பிரதேசத்தில் விநாயகபுரம் விநாயகர் விளையாட்ட கழகம் நடத்திய கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதி நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்த கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு கருத்து தெரிவித்து இருந்தார். அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்

இந்த நாட்டில் திட்டமிட்டப் ஒரு நிகழ்சி நிரலின் ஊடாக தழிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வருகின்றன. இதனுடாக தமிழர்களின் இருப்பு கேள்விக்குறியாகியுள்ளது. தற்போதன இந்த நாட்டு அரசு தனது கொள்கைகளை மறந்து நாட்டை சீரழிந்து செல்வதற்கு காரண கருத்தாவாக அமைந்து இருக்கின்றன. இந்த நாட்டி பெண் அமைச்சர் ஒருவர் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த வேண்டும் என்பதற்காக இரவு நேரக் களியாட்ட நிகழ்வுகளை நடத்த வேண்டும் என்று பாராளுமன்றத்தில் தெரிவித்து இருப்பதன் ஊடாக இந்த நாடும் நாடடின் ஆட்சியாளர்களின் சிந்தனைகள் அழிவை நோக்கி சென்று கொண்டு இருப்பதை எடுத்து காட்டுவதாக அமைந்திருக்கின்றன என்று மேலுதி தெரிவித்து இருந்தார்.

இந்நிகழ்வில் இம்முறை விநாயகபுரம் மகாவித்தியாலயத்தில் இருந்து மருத்துவத் துறைக்கு தெரிவாகி இருந்த முருகாணந்தம் தனுஷ்கா விளையாட்டு கழக நிருவாகிகளால் பாராட்டி கௌரவிக்கப்பட்டு இருந்ததுடன் நிகழ்வில் மதகுருமார்கள் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் திருக்கோவில் பிரதேசசபை உதவி தவிசாளர் எஸ்.விக்னேஸ்வரன் பாடசாலை அதிபர் வங்கி முகாமையாளர்கள் அரச உத்தியோகத்தர்கள் விளையாட்டுக் கழகங்களின் வீரர்கள் என பலரும் கலந்த கொண்டு இருந்தனர்.

# கல்முனை வலயம் இரண்டாம் இடம்

**எஸ்.சிராஜ/தீன்**

கந்தளாய் லீலாரத்ன விளையாடடரங்கில் இடம்பெற்ற கிழக்கு மாகாண மட்ட விளையாட்டு போட்டிகளில் கல்முனை வலயம் இரண்டாம் இடத்தைப்பெற்றுள்ளது. பெருவிளையாட்டு மற்றும் மெய்வல்லுனர் போட்டிகளில் தேசிய மட்ட போட்டிக்கு 131பேர் தெரிவாகியுள்ளளர். அஞ்சலோட்ட சம்பியன்களாக கல்முனை ஸாஹிறாக்கல்லூரியும் 14 வயதுப்பிரிவில் மிகச்சிறந்தவீரராக மருதமுனை அல்மதீனா வித்தியாலய மாணவனும் பாடசாலை ரீதியாக இரண்டாம் இடத்தை நிந்தவூர் மதீனா வித்தியாலயமும் பெற்றுள்ளதாக உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர். முகம்மட் சாஜித் தெரிவித்தார். தேசிய மட்டபோட்டியில் பங்கு பற்றுபவர்களுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக மேலும் தெரிவித்தார்

# காணாமல்போனோரின் உறவினர்களிடம் விசாரணைகள் ஆரம்பம்

**(ரக்ஸனா)**

காணாமல்போனோர் பற்றிய அலுவலக அதிகாரிகள் புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் வைத்து காணாமல்போனோரின் உறவினர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இவ்விசாரணையில் கொழும்பிலிருந்தும், மட்டக்களப்பைச் சேர்ந்த அதிகாரிகள் இதன்போது கலந்து கொண்டு விசாரணைகளை மேற்கொண்டு முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். இதன்போது காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினால் கடிதம் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டவர்கள் கலந்து கொண்டு தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்தனர். இந்நிலையில் புதன்கிழமை(12) மண்முனை தென் எருவில் பற்று, களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தில் நடைபெறும் விசாரணைக்கு வருமாறு 75 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டதாகவும், மாவட்டத்தில் மொத்தமாக 450 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள செங்கலடி, மண்முனை வடக்கு ஆகிய பிரதேச செயலகங்களில் 5 நாட்கள் இவ்வாறு காணாமல்போன உறவினர்களிடம் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு, முறைப்பாடுகள் பதிவு செய்யப்படவுள்ளதாக இதன்போது கலந்து கொண்டிருந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். காணாமல் போனவர்களின் உறவினர்கள் முன்வைக்கும் கோரிக்கைக்கு இணங்க அவர்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்வதற்கு காணாமல்போனோர் பற்றிய அலுவலலகம் பரிந்துரை செய்யும் எனவும் இதன்போது குறித்த அதிகாரி மேலும் தெரிவித்தார். மேற்படி பிரதேச செயலகத்தில் 6 பனல்களில் இடம்பெற்ற இம்முறைப்பாட்டுப் பதிவுகளில், அப்பகுதியைச் சேர்ந்த பலர் கலந்து கொண்டு தமது உறவுகள் காணாமல் போனவிடையம் தொடர்பில் தமது முறைப்பாடுகளைப் பதிவு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

# மன்னார் மற்றும் முல்லைத்தீவு கடற்தொழில் உதவி பணிப்பாளர்களுக்கு இடம்மாற்றம்

**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாவட்ட கடற்தொழில் உதவி பணிப்பாளருக்கு முல்லைத்தீவுக்கும் அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் உதவிப் பணிப்பாளருக்கு மன்னாருக்கும் இடம்மாற்றம். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளராக கடமையாற்றிய திரு. சரத் சந்திரநாயக்க எதிர்வரும் திங்கட்கிழமை (17ஃ10ஃ2022) அமுலுக்கு வரும் வகையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளராக இடமாற்ற பட்டுள்ளார். இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளராக கடமையாற்றிய திரு.வி.கலிஸ்ரன் மன்னார் மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த சில நாட்களாக முல்லைத்தீவு மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சமாசம் ஒருங்கிணைந்து முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் உதவி பணிப்பாளர் தடைசெய்யப்பட்ட மீன்பிடி தொழிலுக்கு துணைபோவதாக கூறி அவரை இடமாற்றம் செய்யக் கோரி தொடர்ச்சியான போராட்டங்களை முல்லைத்தீவு கடற்றொழில் அலுவலகத்தின் முன் நடாத்தி வந்த நிலையிலேயே இவ் இடமாற்றம் இடம்பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# கன்னியா இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்தில் ஒன்று கூடல் மண்டபம் திறந்து வைப்பு



**எப்.முபாரக்**

கன்னியா இராவணேஸ்வரன் தமிழ் வித்தியாலயத்தில் 4 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட ஒன்று கூடல் மண்டபம் இன்று(12) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தவினால் திறந்து வைக்கப்பட்டது. 1951 ம் ஆண்டு இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. 1983 ம் ஆண்டு வரை சீராக இப்பாடசாலை இயங்கி வந்த போதும் 1983ம் ஆண்டிலேற்பட்ட இனக்கலவரம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்ததனால் பாடசாலையும் மூடப்பட்டது. மீள இப்பாடசாலை 2003 ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட இயல்பு நிலை காரணமாக திறக்கப்பட்டது. கிராமியப்பாடசாலையான இப்பாடசாலை பல சவால்களுக்கு மத்தியில் இயங்கி வருவதுடன் தற்போது 80 வீதமான கல்வி அடைவு மட்டத்தையும் அடையப்பெற்றுள்ளது. இப்பாடசாலை பல பௌதீக தேவைகள் வேண்டப்படும் பாடசாலையாக காணப்படுகின்றது. பாடசாலை வரலாற்றில் 2021 ம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்ற யோ.ரோசன் இதன் போது அமைச்சரால் பதக்கம் அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.மேலும் புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள், பல்கலைக்கழகம் தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலையின் நீண்டகால தேவையாக ஒன்று கூடல் மண்டபம் காணப்பட்டது. மாணவர்களது கலைத்திறமைகளை வெளிக்கொணர இவ் ஒன்று கூடல் மண்டபம் ஏதுவாக அமையப்பெற்றுள்ளது. இந்நிகழ்வில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை தவிசாளர் சந்துன் ரட்ணாயக்க,திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பி. தனேஸ்வரன், திருகோணமலை வலயக்கல்விப்பணிப்பாளர் எஸ். சிறீதரன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.



# பிரதேசத்திலுள்ள அனைத்து சமூக மக்களினதும் ஒருமித்த கருத்துடன் தேவைப்பாடுகள் அபிலாஷைகள் தீர்க்கப்படும்

**குச்சவெளி பிரதேச சபைத் தலைவர் ஏ. முபாறக்**

**(ரக்ஸனா) ,**



இந்தப் பிரதேசத்திலுள்ள அனைத்து சமூக மக்களினதும் ஒருமித்த கருத்துக்களை உள்ளடக்கியதொரு பாதீட்டை (வரவு செலவுத் திட்டத்தை)த் தயாரித்து அதனூடாக பிரதேச மக்களின் அபிலாஷைகள், தேவைகள் தீர்க்கப்படும் என குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ. முபாறக் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றங்களில் அவ்வப் பிரதேச மக்களது திட்ட முன் மொழிவுகளை உள்வாங்கி வருடாந்த வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிக்கும் பயிற்சிச் செயலமர்வுகள் குச்சவெளி பிரதேச சபையில் ஞாயிறு திங்கள் (09.10) ஆகிய இரு தினங்களிலும் இடம்பெற்றது. உள்ளூராட்சி மன்றங்களுக்குள்ள நிதி, பௌதீக, மனித வளங்களை வினைத்திறனாகவும் செயற்திறனாகவும் பயன்படுத்தி பிரதேச மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் செயற்திட்டமாக இந்த செயலமர்வுகளை இளைஞர் அபிவிருத்தி அகம் தன்னார்வ உதவு ஊக்க அமைப்பு நடத்தி வருகின்றது.

யூ.எஸ். எய்ட் சர்வதேச தன்னார்வ நிறுவனத்தின் நிதி அனுசரைணயில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தினால் மக்களையும் பிரதேச சபை நிருவாகத்தையும் இணைத்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த பயிற்சிச் செயலமர்வில் குச்சவெளி பிரதேச சபைத் தலைவர் ஏ. முபாறக், உப தலைவர் ஏ.எஸ்.எம். சாஜித், செயலாளர் ஏ. மாலினி உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், வட்டாரங்களிலுள்ள சமூக மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள், சன சமூக நிலைய உறுப்பினர்கள், பெண்கள் இளைஞர்கள் அமைப்புக்களின் அங்கத்தவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சிச் செயலமர்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பிரதேச சபையின் தவிசாளர் முபாறக் இதுவரை காலமும் சபைக்கான வரவு செலவுத் திட்டத்தை நாங்களாகவே தயாரித்து அதனூடாக இந்த சபையின் நிருவாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தோம். ஆனால், தற்போது அந்த முறைமையில் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளது. பிரதேச பொது மக்களின் கருத்துக்களை உள்வாங்கி பிரதேச மக்களின் முன்மொழிவுகளுக்கேற்ப எந்தவிதமான பாகுபாடுகளுமில்லாமல் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட சகல கிரமங்களுக்கும் நகரங்களுக்கும் வழங்கப்படும் சேவைகள் பூரணத்துவம் வாய்ந்ததாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

பிரதேச மக்கள் இப்பிரதேச சபையினூடாக ஒரே குடையின் கீழ் வாழ வேண்டும். அதனடிப்பயையடில் இந்த சபை எதிர்காலத்தில் அதன் நடவடிக்கைகளை பிரதேசத்திலுள்ள அனைத்து சமூக மக்களினதும் ஒருமித்த கருத்துடன் உள்ளடக்கியதொரு பாதீட்டை (வரவு செலவுத் திட்டத்தை)த் தயாரித்து அதனூடாக பிரதேச மக்களின் அபிலாஷைகள் தீர்க்கப்படும். அந்த ஒழுங்கினடிப்படையில் இந்த சபை சுமுகமாகவும் சிறப்பாகவும் இயங்கும். அதற்கான முன்னோடி கருத்தரங்குகளையும் பயிற்சிகளையும் ஏற்பாடுகளையும் மேற்கொண்டு அகம் நிறுவனம் எமக்கு ஆலோசனைகளையும் அனுசரணையையும் வழங்கி வருகின்றது. அதற்காக இந்த சபையின் சார்பிலும் பிரதேச மக்களின் சார்பிலும் எமது நன்றிகள்" என்றார். பயிற்சிச் செயலமர்வின் இறுதியில் மக்கள் பங்கேற்புடனான வரவு செலவுத் திட்டத்திற்காக பிரதேச மக்களால் முன்னுரிமை அடிப்படையில் தேவைகள் அடையாளம் காணப்பட்டு குச்சவெளி பிரதேச சபை நிருவாகத்தினரிடம் சமர்ப்பிக்கப்பட்டன.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் இணைப்பாளர் பொன். சற்சிவானந்தம் அதன் திட்ட உத்தியோகத்தர் வேலாயுதம் மோகன் ஆகியோர் பயிற்சிச் செயலமர்வை நெறிப்படுத்தினர். உள்ளூராட்சித் திணைக்கள சிரேஷ்ட சமூக அபிவிருத்தி அலுவலர் சட்டத்தரணி அன்பழகன் குறூஸ் வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.

# திருக்கோவிலில் வீட்டில் தீ



**(காரைதீவு சகா)**

திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வினாயகபுர கிராமத்திலுள்ள வீடொன்றில் தீ விபத்து ஏற்பட்டது. அதனால் வீட்டில் ஓர் அறைபலத்த சேதத்துக்கு உள்ளானது. விநாயகபுரம்02 கப்புகநார் வீதியில் நேற்றுமுன்தினம் இரவு வேளையில் வீடொன்றில் தீபவிபத்து ஒன்று இடம்பெற்றுள்ளது . இவ் விபத்தில் வீட்டின் ஓர் அறை முற்றாக எரித்து சேதமாகியதுடன் அவ் அறையில் இருந்த பொருட்களும் தீயில் முற்றாக ஏரிந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இத் தீவிபத்திற்கான காரணம் மின்சார இணைப்பு என முதல் கட்ட விசாரனையில் தெரியவந்துள்ளது. இது பற்றிய மேலதிக விசாரணையை திருக்கோவில் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு



களஞ்சியத்தின் விஸ்தீரணம் 1512 சதுர அடி. நீளம் 42 அடி, அகலம் 35 அடி, உயரம் 18 அடி. அலுவலக அறை 170 சதுர அடி. குளியல் அறை, மலசலகூடங்கள் 02, நீர் வசதி, மின்சார வசதி , போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில் அமைந்துள்ளது)
அமைவிடம்: திருகோணமலை வீதி, ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

# பன்குடாவெளி றோ.க.த.க பாடசாலை மாணவி தங்கப்பதக்கத்துடன் இரண்டு வெள்ளிப்பதக்களைப் பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவு




**(செங்கலடி நிருபர் சுபா)**

மட்டக்களப்பு – மண்முனை மேற்கு பன்குடாவெளி றோ.க.த.க பாடசாலை மாணவி தங்கப்பதக்கம் மற்றும் இரண்டு வெள்ளிப்பதக்கங்களைப் பெற்று கிழக்கு மாகாண விளையாட்டுப்போட்டியில் வெற்றியீட்டி தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளார். பன்குடாவெளி றோ.க.த.க பாடசாலையின் மாணவி ஶ்ரீ.தேவதர்சினி இவ் வெற்றிக்களை பெற்றுள்ளார். கிழக்கு மாகாண விளையாட்டுப்போட்டி – 18வயதின் கீழான மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் பரிதி வட்டம் வீசிதலில் 1ம் இடம் பெற்று தங்கப்பதங்கமும், குண்டுபோடுதல் மற்றும் ஈட்டி எறிதல் என்பனவற்றில் 2ம் இடம் பெற்று வெள்ளிப்பதங்கமும் பெற்றுள்ளார்.

தங்கப்பதங்கம் மற்றும் 02வெள்ளிப்பதக்கங்களைப் பெற்று தனது பாடசாலைக்கு பெருமை சேர்த்துத்தந்த மாணவி ஶ்ரீ.தேவதர்சினி அவர்களுக்கான பாராட்டு நிகழ்வு இன்று பாடசாலையில் அதிபர் ஆர். செந்தில்நாதன் தலைமையில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மண்முனை மேற்கு கவ்லி வலயத்தின் பிரதிக்கல்விப்பணிப்பாளர் ஏ.ஜெயக்குமணன் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் பழையமாணவர்கள் பெற்றோர்கள் என பலரும் கலந்துகொண்டிருந்ததுடன், தேசிய மட்டத்திற்கு தெரிவான மாணவியை பன்குடாவெளி பிரதான வீதியில் இருந்து பூமாலை அணிவித்து அழைத்துச் சென்றனர். பின் மணாவர்களின் கரகோசத்தின் மத்தியில் பாடசாலையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்விலும் தேவதர்ஷினி கௌரவிக்கப்பட்டார்.

# நாவற்குடாவில் இந்து கலாசாரத் திணைக்களத்தின் புத்தககண்காட்சி



**(வி.ரி.சகாதேவராஜா)**

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாபெரும் புத்தக கண்காட்சியும், விற்பனையும் மட்டக்களப்பு நாவற்குடா இந்து கலாசார பிராந்திய அலுவலகத்தில் நேற்று ( 11) ஆரம்பமானது. இக் கண்காட்சியை கல்லடி இராமகிருஷ்ண மிஷன் சிறுவர் இல்ல உதவி முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி நீலமாதவானந்தா ஜீ மகராஜ் மற்றும் மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் ஆகியோர் சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தனர். இந்து கலாச்சார உத்தியோகத்தர் கு.ஜெயராஜீயின் நெறிப்படுத்தலில் ஆரம்பித்து வைக்கப்பட்ட இக் கண்காட்சி எதிர்வரும் 14.10.2022 ( வெள்ளி ) வரை நடைபெறவுள்ளது.

"கல்விக்கு கைகொடுப்போம்"
எல்லாவற்றையும் இழந்து நிற்கும் எமது சமுகத்தை
கல்வியால் மட்டுமே கட்டியெழுப்ப முடியும்
அறிவாலயம்
அறக்கட்டளை நம்பிக்கை நிதியம்
இலங்கை.
ஸ்தாபகர் அலையப்போடி நல்லரெத்தினம்
ARIVALAYAM FOUNDATION TRUST
தலைமைக்காரியாலயம்: பண்டாரியாவெளி, கொக்கட்டிச்சோலை
arivalayam@hotmail.fr +94 77 068 4555 | Sriram : +94 77 652 0206




Main Sponsor — MUBARAK® TEXTILES

Co Sponsor — AZEEF FANCY

Official Sraee Blouse Partners — Mahalaxmi Boutique; RS Designer

Official Photography & Videography — INNOVO STUDIO

Official Sraee Florist Partner — Shan Party professionals

Media Partner — தினகரன்; Daily News; SUNDAY OBSERVER; வசந்தம் TV; வசந்தம் FM

# மட்டுநகரில் அருந்ததி வழங்கும்
# BRIDAL FASHION SHOW & CAKE EXHIBITION

2014 ஆம் ஆண்டு அருந்ததி தனியார் நிறுவனம் நிறுவப்பட்டதிலிருந்து இன்று வரை திருமண த்தோடு தொடர்புடைய பலதரப்பட்ட துறைகளில் காலடி பதித்து திருமணங்களில் தனக்கென்றவொறு தனியிட த்தைப் பிடித்துள்ளது. அசைக்கமுடியாத பலமான அஸ்திவாரத்தோடு புது புது விடயங்களை அறிமுகம் செய்து நவீன காலத்திற்கேற்றவவாறு தம்மை பதிவேற்றம் செய்துகொண்டிருக்கிறது.

50 இற்கும் மேற்பட்ட அழகுக்கலை நிபுணர்களுடன் இணைந்து பல்வேறு ஊடக, புகைப்பட, ஆடை அலங்கார மற்றும் Aari Work அனுசரைணயாளர்களின் ஒத்துழைப்போடு தனித்துவமாய் நடைபெறும். ஏராளமான பார்வையாளர்களோடு பலரின் எதிர்பார்ப்புகளோடு இதுவரையில் எந்தவொரு நிறுவனமும் ஏற்பாடு செய்திராத மணப்பெண் அலங்காரக் காட்சியை பல இடங்களிலும் நடாத்துவதே அருந்ததியின் குறிக்கோள்.

அந்த வகையில் 2022 கடந்த ஜனவரி 10 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்திலும் மார்ச் 10ம் திகதி யாழ்ப்பாணத்திலும் மிகப் பிரம்மாண்டமாக இம் மாற்றுமோதிரம் நிகழ்வு நடைபெற்றது.


**மணப்பெண் அலங்காரக் காட்சி**
**கேக் கண்காட்சி**
**15 ஒக்டோபர் 2022**
**அஞ்சனா கிரேண்ட் பெலஷில்**

இந்த சிறப்பு நிகழ்வானது ஒவ் வொரு மாவட்டத்திலுமுள்ள பெண் முயற்சியாளர்களை இந்த சமூதாயத்திற்கு அறிமுகப்படுத்தும் முயற்சியாக மீண்டுமொரு மாற்று மோதிர நிகழ்வை நடாத்த அருந்ததி நிறுவனம் திட்டமி ட்டுள்ளது. அந்த வகையில் பலரின் நன்மதிப்பையும் நேர்மறையான கருத்துக்களையும் பெற்று வெற்றிப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கும் மணப்பெண் அலங்காரக் காட்சி மாற்றுமொரு பிரம்மாண்டத்தோடு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 10 ஆம் திகதி மட்டகளப்பு அஞ்சனா கிரேண்ட் பெலஷில் நடைபெறவுள்ளது. பிரதம மற்றும் சிறப்பு அதிதிகளின் வருகையோடு பல பிரதேசங்களில் இருந்தும் சிறப்பு தேர்ச்சி பெற்ற அழகுக்கலை நிபுணர்கள் இதில் பங்கேற்கவுள்ளனர். எதிர்பார்ப்புகளோடு வரும் அனைவரையும் நிச்சயம் இந் நிகழ்வு திருப்திபடுத்துமென்பதில் எவ்வித ஐயமுமில்லை..

## அழகுக்கலை நிபுணர்கள்




அழகுக்கலை சார்பாக கலந்துகொள்ளும் சிறப்பு விருந்தினர்
Kayalvili Jeyaprakash
Salon Nayagara & Academy





## கேக் வடிமைப்பாளர்கள்



# அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தினால் புத்தாக்கச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் செயலமர்வு



அக்கரைப்பற்று வலயக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ரஹ்மதுல்லாஹ் அவர்களின் தலைமையில் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அல் – ஹம்றா மகா வித்தியாலயம், அல் – மின்ஹாஜ் மகா வித்தியாலயம், அல் – முனிறா மகளீர் தேசிய பாடசாலை, ஆயிஷா முஸ்லிம் மகளீர் கல்லூரி, சிறாஜ் மகா வித்தியாலயம் மற்றும் அல் – இர்ஃபான் மகளீர் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வு இன்று அட்டாளைச்சேனை மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

கல்வி அமைச்சினால் ளுநுளுஜீ செயற்திட்டத்தினூடாக ஆறு பாடசாலைகளுக்கும் தலா எட்டு இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்களது கண்டுபிடிப்புக்களை வணிகமயப்படுத்துவதற்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களை வாங்குவதற்கும் பாடசாலைகளில் புத்தாக்க கழகங்களை நிறுவுவதற்கும் பயன்படுத்தப்படவுள்ளது. மேலும் இளம் விஞ்ஞானி எஸ். வினோஜ்குமார் வளவாளராக கலந்து கொண்டு புத்தாக்கம் மற்றும் ஆக்கவுரிமைப்பத்திரம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினார். இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வலயக்கல்விப் பணிப்பாளர் கருத்து தெரிவிக்கையில் " மாணவர்களுக்கு புள்ளிகளை நோக்காக மட்டும் கல்வித் திட்டம் கொண்டிராமல் புத்தாக்கத்தினூடாக எதிர்கால சவால்களை சமாளிக்க மாணவர்களுக்கு இவ்வாறான புதிய திட்டத்தை கல்வி அமைச்சு ஆரம்பித்திருப்பது மிகவும் பாராட்டத்தக்க விடயமாகும். இதற்கு ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் இணைப்பாடங்களில் இதனை உள்வாங்கி, மாணவர்களுக்கு நல்ல தெளிவூட்டல்களை வழங்க வேண்டும். தற்போது நமது நாடு எதிர் கொண்டுள்ள பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்பதற்கு புதிய கண்டுபிடிப்புகள் மிக முக்கியமானவை. எதிர்வரும் டிசம்பர் மாதம் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலைகளையும் ஒன்றிணைத்து புத்தாக்கம் கண்காட்சியொன்றை நடாத்தவுள்ளோம். அதில் சிறந்த கண்டுபிடிப்புக்களை கல்வி அமைச்சினூடாக வணிகமயப்படுத்துவதற்கும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். இந்த வருடம் இலங்கையில் உள்ள 750 பாடசாலைகளுக்கு இந் நிதி வழங்கப்பட்டுள்ளது. அதில் எமது வலயத்தைச் சேர்ந்த ஆறு பாடசாலைகளுக்கு இந் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது. இதனூடாக எமது வலயக் கல்வி அலுவலகத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சந்தர்ப்பங்களை வழங்கவுள்ளோம். மேலும் இந் நிகழ்வை ஏற்பாடு செய்வதற்கு துணை நிற்கும் பிரதி கல்விப் பணிப்பாளர் எம்.எம். சித்திபாத்திமா அவர்களுக்கும், பிரதிக்கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.ஹசீன் அவர்களுக்கும், உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.டி.எம். ஜனோபர் அவர்களுக்கும், இளம் விஞ்ஞானி சோ. வினோஜ்குமார் அவர்களுக்கும் மற்றும் அதிபர்கள் ஆசிரியர்களுக்கும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்." இந் நிகழ்வில் நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# சட்ட விரோத மீன்பிடியை அனுமதிக்க முடியாது

## கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா திருமலையில் தெரிவிப்பு



**ஹஸ்பர்**

சட்டவிரோத மீன்பிடியை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. இச்செயற்பாடு காரணமாக மீன் இனம் முற்றாக அழிந்து விடும். சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபடுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்த அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுமாறு கடல் தொழில் அமைச்சர் டக்லஸ் தேவானந்தா இதன்போது உரிய அதிகாரிகளிடம் வேண்டிக்கொண்டார். திருகோணமலை மாவட்ட மீனவ சங்கங்களுடனான கலந்துரையாடல் நேற்று (11) உப்புவெளி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் கடற்றொழில் அமைச்சரின் தலைமையில் நடைபெற்றபோதே அமைச்சர் மேற்குறித்தவாறு தெரிவித்தார்.

மீனவர்களுக்கான மண்ணெண்ணையை சீராக வழங்க தற்போது இறக்குமதி செய்யப்படும் மண்ணெண்ணை போதுமானதாக காணப்படவில்லை. எனவே மண்ணெண்ணையை தனியார் இறக்குமதி செய்யவதற்கான அனுமதியை கோரியுள்ளோம்.அவ்வனுமதி கிடைக்கப்பெறுமாயின் மீனவர்களுக்கான மண்ணெண்ணை பிரச்சினையை தீர்க்க முடியும். தாம் வருகை தந்தது மீனவர்களது பிரச்சினைகளை கலந்துரையாடி தீர்ப்பதற்கே ஆகும். மீனவர்களது நியாயமான கோரிக்கைகள் கவனத்திற்கொள்ளப்பட்டு தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் இதன்போது அமைச்சர் தெரிவித்தார். சட்டவிரோத மீன்பிடியை தடுக்க மீனவ சங்கங்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அமைச்சு,திணைக்களம் மற்றும் மீனவ சங்கங்கள் ஆகியன ஒன்றிணைந்து செயற்படல் மூலமே இப்பிரச்சினையை தீர்க்க முடியும். வெறுமனே ஒரு தரப்பிற்கு மாத்திரம் இதனை தடுக்க முடியாது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்டத்தைச்சேர்ந்த பல மீனவச்சங்கங்கள் இதன்போது தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்தனர். குறித்த கோரிக்கைகளை தமக்கு எழுத்து மூலம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இதன்போது அமைச்சர் வேண்டிக்கொண்டார். அதிகமான பிரச்சினைகளை அமைச்சர் ஆழமாக ஆராய்ந்து சில பிரச்சினைகளை உரிய அதிகாரிகளை தொடர்பு கொண்டு தீர்க்க முற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட மீன்பிடி திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர், திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவ சங்க பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# உப தவிசாளரது பணியினை செய்யவிடாமல் தடுத்த தவிசாளர்

**ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதியான சபையின் உப தவிசாளருக்கு தமது கடமைகளை செய்ய விடாது உப தவிசாளர் அறையினை பூட்டி சர்வாதிகாரமாக சபையின் தவிசாளர் தடுத்ததாக திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உபதவிசாளர் முகம்மட் நௌபர் தெரிவித்தார். சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்த சபையின் உப தவிசாளர்...

சம்பவ தினமான இன்று மாதாந்த சபைக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக காலை 8.45 மணிக்கு பிரதேச சபையின் உப தவிசாளருக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறப்புரிமையில் ஒன்றான உப தவிசாளருக்கு வழங்கப்பட்ட உப தவிசாளர் அறைக்கு சென்றபோது தனது உத்தியோகபூர்வ அறையின் கதவு மூடி இருந்ததாகவும் உத்தியோகத்தர்கள் மற்றும் செயலாளரிடம் கதவை யார் மூடியது என்று உப தவிசாளர் வினவியபோது தங்களுக்கு தெரியாது என அலுவலக அதிகாரிகள் பதிலளித்தமாகவும் பின்னர் சபையின் தவிசாளரிடம் குறித்த விடயம் தொடர்பில் வினவிய போது சபையின் தவிசாளர் "நான்தான் மூடினேன் கதவினை திறக்க முடியாது,உப தவிசாளர் அறையினை நீங்கள் பயன்படுத்த முடியாது" என்று சர்வாதிகாரமாக நடந்து கொண்டதாக சபையின் உப தவிசாளர் முகமட் நௌபர் தெரிவித்தார். மேலும் இன்றைய தினம் சபையின் கடமைகளை உப தவிசாளர் அறையின் நடைபாதையில் செய்ததாகவும் தனது காலை உணவை தரையில் வைத்து உண்டதாகவும் சபையின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இவ்வாறு மக்கள் பிரதிநிதியின் சிறப்புரிமையை மீறி செயல்படும் சபையின் தவிசாளர் மற்றும் பிரதேச சபையின் உப தவிசாளரின் கடமைகளை செய்ய விடாமல் தடுத்த குறித்த சபை பாரபட்சமான முறையில் நடந்து கொள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் குறித்த சபையின் தவிசாளர் மீது பாரபட்சமின்ற விசாரணை நடத்தி குறித்த சபையின் நடுநிலையை நிலைநாட்டுமாறும் புத்திஜீவிகள் வேண்டுகோள் விடுக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மேய்ச்சல் தரை கால் நடை பராமரிப்புக்கு தீர்வு கோரி இம்ரான் எம்.பி சந்திப்பு



**ஹஸ்பர்**

தற்பொழுது வேளாண்மை செய்கை ஆரம்பமாகியுள்ளதினால் மேய்ச்சல் தரை இன்மையினால் கிண்ணியா பிரதேசத்தில் இருக்கும் ஆயிரக்கணக்கான கால்நடைகளை பராமரிப்பதில் பண்ணையாளர்கள் பாரிய நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். முன்னர் போன்று கந்தளாய் சீனி தொழிற்சாலைக்கு (பெக்டரி) கால்நடைகளை கொண்டுசெல்ல முடியாத நிலை காணப்படுகின்றது. கால்நடை சங்க உறுப்பினர்கள் சகிதம் இது சம்பந்தமாக காணி விடயத்திற்கு பொறுப்பான மேலதிக அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன் அவர்களை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் (11) சந்தித்து தற்காலிகமாக 4 மாதங்களுக்கு கந்தளாய் சீனி தொழிற்சாலை வளாகத்தில் கிண்ணியா பிரதேச கால்நடைகளை வைத்து பராமரிப்பதற்கு அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

# திருக்கோனேஸ்வர ஆலயத்துக்கு புத்தசாசன அமைச்சர் நேரில் விஜயம்

## தொல்லியல் பிரச்சினை தொடர்பிலும் ஆராய்வு



**ஹஸ்பர்**

திருகோணமலை திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கான கள விஜயம் ஒன்றினை நேற்று (11) புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக்க மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் மேற்கொண்டனர். திருக்கோணேஸ்வரம் ஆலயத்துக்கு செல்கின்ற பாதையின் இருமருங்கிலும் அமையப் பெற்றுள்ள தற்காலிகக் கடைத்தொகுதிகள் கோணேஸ்வர ஆலயத்தைத் தரிசிக்க வரும் பக்தர்களுக்கு இடையூராக உள்ளதாகவும் அதனை பொருத்தமான இடத்துக்கு அப்புறப்படுத்துமாறு ஆலயப் பரிபாலன சபை உட்பட பல்வேறு தரப்பினர்கள் கோரிக்கைகள் முன்வைத்ததனையடுத்து அவற்றை குறித்த தரப்புகளோடு கலந்துரையாடி சாதகமான தீர்வுகளை வழங்குவதே அமைச்சர்களினது இவ்விஜயத்தின் நோக்கமாக அமையப்பெற்றது.

ஆலயப் பரிபாலன சபை மற்றும் வர்த்தக சங்கத்தினருடன் அமைச்சர் கலந்துரையாடலை மேற்கொண்டதுடன் குறித்த கடைத்தொகுதிகளை அப்பிரதேசத்திலிருந்து அகற்றி இன்னுமொரு இடத்தில் அமைப்பதற்கான இரண்டு இடங்களை நேரடியாகச் சென்று அமைச்சர் உட்பட அதிகாரிகள் அவதானித்தனர்.

ஆலயத்திற்கும் இயற்கைச் சுற்றாடலுக்கும் தொல்பொருள் சார்ந்த விடயங்களுக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படாதவகையில் குறித்த செயற்பாடு முன்னெடுக்கப்படும். எந்தவொரு தரப்புக்கும் அநீதி ஏற்படாத வகையில் இந்தச் செயற்பாடு நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சர் விதுர விக்ரமநாயக்க இதன்போது தெரிவித்தார். தொல்பொருள் சார்ந்த விடயங்கள் குறித்த ஒரு சமயத்துக்கு மாத்திரம் உரித்தானதல்ல என்றும் அவற்றைப் பாதுகாப்பது அனைத்து மக்களதும் பொறுப்பாகுமென்றும் இதன்போது அமைச்சர் மேலும் எடுத்துரைத்தார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களில் ஒன்றான கோணேஸ்வரம் ஆலயத்தை சூழவுள்ள பிரதேசங்களில் வெகு விரைவில் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். இக்கள விஜயத்தில் திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலாளர் பி.தனேஸ்வரன் திருகோணமலை மாவட்டத் தொல்பொருள் திணைக்கள உதவிப்பணிப்பாளர், துறைசார் அதிகாரிகள், ஆலயப் பரிபாலன சபை நிர்வாகத்தினர் மற்றும் வர்த்தகசங்கப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

# திருகோணமலை முத்துநகர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா





**(அ . அச்சுதன்)**

திருகோணமலை கல்வி வலய முத்துநகர், முஸ்லிம் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா செவ்வாய்க்கிழமை (11) காலை 9.00 மணியளவில் பாடசாலை திறந்த வெளியில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எம்.எம். முஹைஸ் அவர்களது தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஸ்ரீதரன் அவர்களும் சிறப்பு அதிதியாக தம்பலகாமம் கோட்டக் கல்வி அதிகாரி எஸ். இராஜசுரேஷ் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். கடந்த 2018.முதல் 2021 வரையான ஆண்டுகளில் கல்வி அடைவுகள் மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவித்து அவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.